அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 286

அரசாங்க நிருவாக அமைச்சு,
டொரிங்டன் சதுக்கம்,
கொழும்பு. 7
23 ஏப்ரல், 1985.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

## கடன்சபைகள் திணைக்களத்தை கலைத்துவிடுதல்

1 ஜுலை 1985 ஆம் திகதி முதல் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குத் திட்டத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு கடன்கள் வழங்கப்படும்.

கடன் சபைகள் திட்டத்திலிருந்து புதிய திட்டத்துக்கு மாறும் நிலையை இலகுபடுத்துவதற்காக பின்வருவனவற்றைத் தயைகூர்ந்து கடைப்பிடிக்கவும்.

1. 01-05-85 ஆம் திகதியிலிருந்து உதவு தொகை (வேதனத்தில் நூற்றுக்கு ஒரு வீதம்) அறவிடப்படுதலாகாது.
2. 30-04-85 ஆம் திகதி வரை அறவிடப்பட்ட எல்லா உதவு தொகைகளும் இதுவரை செய்தது போல் கடன் சபைகள் பணிப்பாளரின் வங்கிக் கணக்குக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.
3. கடன் சபைகளின் நிதியிலிருந்து அங்கத்தவர்களுக்குக் கடன் தொகைகளைச் செலுத்துதல் 1-05-85 தொடக்கம் 30-06-85 வரை இடைநிறுத்தப்படும்.
4. கடன்சபையின் கைவசமுள்ள வங்கி இருப்புக்களை கையளிப்பது பற்றிய அறிவுறுத்துரைகளை திறைசேரி வெளியிடும்.
5. கடன் தவணைக் கட்டணங்களையும் வட்டியையும் அறவிடும் பணியை 30-06-85 ஆம் திகதி வரை தொடர்ந்து எல்லாக் கடன் சபைகளும் செய்யும்.
6. கடன் சபைகள் அனைத்தும் தத்தமது ஏடுகளையும் கணக்குப் பதிவுகளையும் காள வரையிலாகக் கொண்டு வருவதுடன் இறுதி நிலுவைக் கணக்குகள் யாவற்றையும் கணக்காய்வாளர் அதிபதிக்கும் கடன் சபைகள் பணிப்பாளருக்கும் வழங்குதல் வேண்டும்.
7. 30-06-85 வரை சேவையிலிருந்து இளைப்பாறும் அங்கத்தவர்களின் உதவு தொகைகளை இதுவரை செய்தது போல கடன் சபைகளின் பணிப்பாளர் மீளளிப் செய்வார்.
8. 1-07-85 இல் அல்லது அதற்குப் பின்னர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக் உதவு தொகைகளை மீளளிப்புச் செய்வது பற்றி மேற்கொண்டு அறிவுறுத்துரைகள் வெளியிடப்படும்.
9. எனினும் 1985 மே மாதத்து வேதனத்திலிருந்து நூற்றுக்கு ஒரு வீதம் உதவு தொகை ஏற்கனவே அறவிடப்பட்டிருந்தால் தயை கூர்ந்து அத்தகைய உதவு தொகைகளை கடன் சபைகள் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அனுப்பாது உரிய அங்கத்தவர்களுக்கு மீண்டும் வழங்கிவிடுக.

ஒப்பம்: டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.

பிரதி: கணக்காய்வாளர் அதிபதி.